(ஆறாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

**இல. 1 (3)]**

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2008, யூலை 25, வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## 2008, ஓகத்து 05, செவ்வாய்க்கிழமை

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

*.

கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சர்,— குறைநிரப்பும் தொகை — தலைப்பு 118, நிகழ்ச்சித்திட்டம் 2,— † 2008 ஆம் ஆண்டு சனவரி மாதம் 1 ஆம் திகதி தொடங்கி 2008 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆம் திகதி முடிவடையும் நிதியாண்டின் சேவைக்கு இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் திரட்டு நிதியத்தினின்றும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினதும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் அரசாங்கம் பயன்படுத்தக்கூடிய வேறெந்த நிதியிலிருந்தும் அல்லது பணத்திலிருந்தும் அல்லது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கம் பெற்றிருக்கும் எந்தக் கடன் நிதியத்திலிருந்தும் ஆயிரத்து நூற்றி எண்பத்தி ஐந்து கோடியே நாற்பது இலட்சம் (ரூபா 11,85,40,00,000) ரூபாவிற்கு மேற்படாத குறைநிரப்பும் தொகையொன்று வழங்கப்படல் வேண்டும். அத்தொகை பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு செலவு செய்யப்படலாம்:-

**அட்டவணை**

| | | ரூபா |
|---|---|---|
| தலைப்பு 118 | — கமத்தொழில் அபிவிருத்தி, சமந சேவைகள் அமைச்சு | |
| நிகழ்ச்சித்திட்டம் 2 | — அபிவிருத்தி நடவடிக்கைகள் | |
| கருத்திட்டம் 3 | — கமத்தொழில் அபிவிருத்தி | |
| | மீண்டுவரும் செலவினம் | 11,85,40,00,000 |
| | மொத்தம் | 11,85,40,00,000 |

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

† 2008, யூலை மாதம் 25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க குறைநிரப்பும் மதிப்பீட்டைப் பார்க்க. இலக்கம் 1 முதல் 4 வரையுள்ள மதிப்பீடுகளின் மொத்தம் ரூபா 3,216,180,332.

*

நகரக் குடியமர்த்தல் அபிவிருத்தி சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

*

நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சர்,— நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— தேசிய அரசுப் பேரவையின் 1978 ஆம் ஆண்டின் 41 ஆம் இலக்க, நகர அபிவிருத்தி அதிகாரசபைச் சட்டத்தின் 21 ஆம் பிரிவின் (1) உட்பிரிவின் கீழ் நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008, மே மாதம் 27 ஆந் திகதிய 1555/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2008.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சர்,— காட்டுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (451 ஆம் அத்தியாயமான) காட்டுக் கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008 மே மாதம் 09 ஆம் திகதிய 1548/29 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.07.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

*

சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சர்,— தேசிய சூழல் சட்டத்தின் கீழ் கட்டளை,— 1988 ஆம் ஆண்டின் 56 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் 2000 ஆம் ஆண்டின் 53 ஆம் இலக்கச் சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 23அ ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல மற்றும் இயற்கை வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008 சனவரி மாதம் 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2008.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

*

சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சர்,— தேசிய சூழல் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1980 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க, தேசிய சூழல் சட்டத்தின் 23 அ மற்றும் 23 ஆ ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 32 ஆம் பிரிவின் கீழ் சுற்றாடல், இயற்கை வளங்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2008 பெப்ருவரி மாதம் 01 ஆந் திகதிய 1534/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப் பட்டதும் 2008.07.25 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப் படுமாக.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றது.

---

## 2008, செத்தெம்பர் 09, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0722/ '08

கௌரவ என். டீ. என். பி. ஜயசிங்க,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தற்போது நுவரெலியா மாவட்டத்திலும் அதன் எல்லைப் புறங்களிலும் மின்வலுவை உற்பத்தி செய்கின்ற அரச மற்றும் தனியார் துறை மின்வலு உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) அத்தகைய ஒவ்வொரு மின்வலு உற்பத்தி நிலையத்தின் மூலமும் வருடாந்தம் எவ்வளவு மின் அலகுகள் உற்பத்தி செய்யப்படுகின்றன,

(iii) மேற்படி ஒவ்வொரு மின் உற்பத்தி நிலையமும் நிர்மாணிக்கப்பட்ட போது நீர்த் தேக்கங்கள் மற்றும் ஏனைய நிர்மாணிப்புகளின் பொருட்டு ஒதுக்கப் பட்ட நிலப்பரப்பு மற்றும் அகற்றப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நுவரெலியா மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் உள்ள மின்சாரமற்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் மின்சாரம் கிடைக்கப்பெறாத குடும்பங்களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு,

(ii) குறிப்பிடப்பட்ட பிரதேச செயலாளர் பிரிவில் குறைந்த வோல்ட் மின்சாரத்து டன் கூடிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எண்ணிக்கை மற்றும் குறித்த குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) மேற்படி மின்சாரமற்ற மற்றும் குறைந்த வோல்ட் மின்சாரத்தைக் கொண்ட பிரதேசங்களின் தேவைகளை நிறைவு செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாது,

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) குறித்த அமைச்சினால் அமுலாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ள சீன உதவிகள் உட்பட 'சீடா' கருத்திட்டங்கள் மற்றும் ஏனைய மின்சாரக் கருத்திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) இவற்றில் நுவரெலியா மாவட்டத்தின் பொருட்டு ஒதுக்கப்பட்டுள்ள கருத்திட் டங்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0723/ '08

கௌரவ என். டீ. என். பி. ஜயசிங்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரு மானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) நுவரெலியா மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் உள்ள சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவியில் இருக்கின்ற அதேநேரம் ஆசிரிய தொழிலும் ஈடுபட்டுள்ளோர்களது எண்ணிக்கை எவ்வளவு,

(ii) இவர்களுக்குச் சம்பளம் செலுத்தும் பொருட்டு சமுர்த்தி இயக்கத்தினால் மாதாந்தம் செலுத்தப்படுகின்ற தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குறிப்பிட்ட சமுர்த்தி ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படுகின்றபோது ஏற்புடையதாகக் கொள்ளப்பட்ட கல்வித் தகைமைகள் யாவை,

(ii) ஆட்சேர்ப்பின் போது ஒவ்வொரு சமுர்த்தி ஆசிரியரினதும் கல்வித் தகைமை யாது,

(iii) இவர்கள் தொடர்ந்தும் குறிப்பிட்ட பதவியில் சேவையில் ஈடுபடுத்தப் படுவார்களா,

(iv) இன்றேல் கல்வி அமைச்சுக்கு இணைக்கப்படுவார்களா,

(v) இவர்களுடைய ஆசிரிய தொழிலை அபிவிருத்தி செய்யும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள மற்றும் மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0724/ '08

கௌரவ என். டீ. என். பி. ஜயசிங்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) நுவரெலியா மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் உள்ள சமுர்த்தி உதவி தொகைகளைப் பெறுகின்ற குடும்பங்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) இவர்களில் ரூ.1000/-, ரூ. 500/-, ரூ. 300/- மற்றும் 140/- கொடுப்பனவுகளைப் பெறுகின்றவர்களின் எண்ணிக்கை பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் எவ்வளவு,

(iii) இதற்கிணங்க, சமுர்த்தி நலன் பெறுனர்களுக்கு செலுத்தப்படும் மொத்தத் தொகை பிரதேச செயலாளர் மட்டத்தில் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி மாவட்டத்தில் சமுர்த்தி இயக்கத்தில் சேவையில் ஈடுபட்டுள்ள சமுர்த்த்தி முகாமையாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய பதவிகளை வகிக்கின்றவர்கள் தனித்தனியாக எவ்வளவு,

(ii) இவர்களுக்குச் செலுத்தப்படுகின்ற மாதாந்தச் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் அத்துடன் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் அவற்றின் கூட்டுத்தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் உள்ள சமுர்த்தி வங்கிகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) மேற்படி ஒவ்வொரு சமுர்த்தி வங்கியினதும் கணக்குகளிலுள்ள சேமிப்புத் தொகை மற்றும் நலன்பெறுனர்களின் பொருட்டு வழங்கப்பட்டுள்ள கடன் தொகை எவ்வளவு,

(iii) குறித்த கடன்பட்டோர் மற்றும் செலுத்தப்படாதுள்ள கடன் தொகை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0147/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2007 ஆம் அண்டுக்கான திருத்தியமைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் (2008 வரவு செலவு மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு) மூலம், நகர மக்களுக்கு வசதிகளை ஏற்படுத்தும் திட்டத்தின் கீழ் நகரங்களை நிலையானவைகளாக்குவதற்கு 1489 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2007 ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) அது எந்தக் கருத்திட்டத்திற்கானது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0148/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2006 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் மூலம், சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நீர் வழங்கல் கருத்திட்டத்திற்காக 1712 மில்லியன் ரூபா ஒதுக்கப் பட்டிருந்தது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2006 ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) அது எந்தந்தப் பிரதேசங்களில் கருத்திட்டங்களுக்காக செலவு செய்யப்பட்டது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0149/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2007 ஆம் ஆண்டுக்கான திருத்தியமைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் (2008 வரவு செலவு மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு) மூலம், சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நீர் வழங்கல் கருத்திட்டத்திற்காக 3169 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2007 ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) அது எந்தந்தப் பிரதேசங்களில் கருத்திட்டங்களுக்காக செலவு செய்யப்பட்டது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0195/ '08

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பத்திரன,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) அநுராதபுரம் மாவட்டத்தில் விலச்சிய விவசாய குடியேற்றத்திட்டத்திற்கு நீர் வழங்கும் விலச்சிய குளம் மற்றும் நீர்ப்பாசன கட்டமைப்பு புனர் நிர்மாணம் செய்யப்பட்ட திகதியையும் விவசாயக் குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதியையும் வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்த குடியேற்றத்திட்டத்திற்கு நீர் வழங்கும் குளத்தின் கொள்ளளவு எத்தனை ஏக்கர் அடி என்பதையும்,

(ii) அதன் மூலம் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iii) விலச்சிய குடியேற்றத் திட்டத்தின் கீழ் 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் சிறுபோகம் மற்றும் பெரும்போகத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட காணியின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இந்தக் குளத்தின் பழுதடைந்துள்ள நீர்ப்பாசன கட்டமைப்பின் காரணமாக விவசாய நிலங்களுக்கு போதுமான நீர் கிடைப்பதில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) இந்தக் குளத்தின் நீர்ப்பாசன கட்டமைப்பை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், அந்தப் புதுப்பித்தல் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்குக் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0196/ '08

கௌரவ ஆர். பி. ஏ. ரணவீர பத்திரன,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமானச்சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) திருகோணமலை மாவட்டத்தில் கந்தளை விவசாய குடியேற்றத்திட்டத்திற்கு நீர் வழங்கும் கந்தளை குளம் மற்றும் நீர்ப்பாசன கட்டமைப்பு புனர் நிர்மாணம் செய்யப்பட்ட திகதியையும் விவசாயக் குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்ட திகதியையும் வெவ்வேறாக அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்த குடியேற்றத்திட்டத்திற்கு நீர் வழங்கும் குளத்தின் கொள்ளளவு எத்தனை ஏக்கர் அடி என்பதையும்,

(ii) அதன் மூலம் நெற்செய்கை மேற்கொள்ளப்படும் காணிகளின் அளவு எவ்வளவு என்பதையும்,

(iii) கந்தளை குடியேற்றத் திட்டத்தின் கீழ் 2005, 2006 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் சிறுபோகம் மற்றும் பெரும்போகத்தில் நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட காணியின் அளவு வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்குக் கூறுவாரா?

(இ) இந்தக் குளத்தின் பழுதடைந்துள்ள நீர்ப்பாசன கட்டமைப்பின் காரணமாக விவசாய நிலங்களுக்கு போதுமான நீர் கிடைப்பதில்லை என்பதை அவர் அறிவாரா?

(ஈ) (i) இந்தக் குளத்தின் நீர்ப்பாசன கட்டமைப்பை புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்,

(ii) அவ்வாறெனின், அந்தப் புதுப்பித்தல் பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும்

அவர் இச்சபைக்குக் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2008, செத்தெம்பர் 10, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0725/ '08

கௌரவ என். டீ. என். பி. ஜயசிங்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) சமுர்த்தி பணத்தை மோசடி செய்தமையின் காரணமாக நுவரெலியா மாவட்டத்தில் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவிலும் தற்போது சேவையை இழந்துள்ள முகாமையாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களது எண்ணிக்கை எவ்வளவு,

(ii) குறித்த மோசடிகளுடன் தொடர்புடைய அத்தகைய ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் பெயர் மற்றும் மோசடி செய்யப்பட்டுள்ள தொகை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) குறித்த பணத்தொகைகளை அறவிடும் பொருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0726/ '08

கௌரவ என்.டீ. என்.பி. ஜயசிங்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) நுவரெலியா மாவட்டத்தில் நிரந்தர வதிவுடையோரல்லாத கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரம்) வகுப்புக்களில் மற்றும் உயர் தர விஞ்ஞான, கலை மற்றும் வர்த்தக பாடங்களைக் கற்கின்ற மாணவர்களது எண்ணிக்கை பாடசாலை மட்டத்தில் மற்றும் கல்வி வலய மட்டத்தில் தனித்தனியாக எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த 10 வருடத்தினுள் நுவரெலியா மாவட்டத்திலிருந்து பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுள்ள மாணவர்களின் ஏண்ணிக்கை பாடசாலை மட்டத்தில் எவ்வளவு,

(ii) இவர்களில் குறித்த மாவட்டத்தில் நிரந்தர வதிவுடையோரல்லாத மாணவர்களது எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0727/ '08

கௌரவ என். டி. என். பி. ஜயசிங்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சுக்கு அதன் தொடக்கத்தில் இருந்து 2007 ஆம் ஆண்டு வரை வரவு செலவுத்திட்டம் மூலமாக ஒதுக்கப்பட்ட பணத்தொகை எவ்வளவு,

(ii) அப் பணத்தொகையில் இருந்து கல்வி, சுகாதாரம், வீதிகள் மற்றும் மின்சாரம் போன்ற துறைகளின் அபிவிருத்திக்காக பிரயோகித்த பணத்தொகை வருடாந்தம் தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு தொடக்கத்தில் இருந்து ஒவ்வொரு மின்சாரக் கருத்திட்டத்திற்காகவும் ஒதுக்கிய பணத்தொகை பிரதேச செயலகப் பிரிவு வாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0150/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2006 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் மூலம் அனைத்து மாகாணங்களிலும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நீர் வழங்கல் திட்டத்திற்காக 1537 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2006 ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0151/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2006 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் மூலம் பிரதான நகரங்களில் பாரியளவிலான நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுத் திட்டங்களுக்காக 13355 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2006ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் யாவை,

(iii) கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்ட பிரதான நகரங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0152/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2007 ஆம் ஆண்டுக்கான திருத்தியமைக்கப்பட்ட வரவு செலவு திட்டத்தின் (2008 வரவு செலவு மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு) மூலம் பிரதான நகரங்களில் பாரியளவிலான நீர் வழங்கல் மற்றும் துப்புரவேற்பாட்டுத் திட்டங்களுக்காக 17040 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2007 ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் யாவை,

(iii) கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்ட பிரதான நகரங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0009/'08

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொழில்முயற்சி அபிவிருத்தி, முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அரசாங்கத்தின் கூற்றின் பிரகாரம், நாட்டில் கூடுதலான முதலீடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும் கைச்சாத்திடப்பட்ட திகதிகளுடன் முதலீட்டு ஊக்குவிப்புச்சபை சட்டத்தின் 16 ஆம் 17 ஆம் பிரிவுகளின் கீழ் உடன்படிக்கைகள், தொழில் வாய்ப்புக்கள், முதலீட்டின் பெறுமதி ஆகியவற்றையும் 2006 ஆம் ஆண்டு சனவரி 01 ஆம் திகதி முதல் இற்றைவரை அவை எப்போது ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டது என்பதையும் அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மேலே (அ)வில் சொல்லப்பட்டதன் பிரகாரம் உண்மையான முதலீட்டையும்,

(ii) அது தொழில்வாய்ப்பு மிக்கதாய் ஆக்கப்பட்ட திகதியையும்,

(iii) அது அமைந்துள்ள இடத்தையும்

அவர் கூறுவாரா?

(இ) மேலே (அ) மற்றும் (ஆ)வில் சொல்லப்பட்டதன் பிரகாரம் நாட்டின் ஏற்றுமதி வளத்தில் அது ஏற்படுத்திய நிகர தாக்கத்தை அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0011/'08

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) லங்கா புத்திர வங்கி கூட்டிணைக்கப்பட்டது எப்போது என்பதையும் அதன் மூலதனத்தினையும்,

(ii) இது வங்கியற்ற நிறுவனங்களினாலா முதலிடப்பட்டது என்பதையும்,

(iii) அவ்வாறாயின் சாதாரண பங்குகள், விருப்பத்தெரிவுப் பங்குகள், கடனீட்டுப் பத்திரம் ஆகியவற்றை வெவ்வேறாகவும்,

(iv) ஆரம்பத்திலிருந்து இற்றைவரையிலான கணக்குகளையும்,

(v) அங்கு தற்போது பணிபுரியும் பணியாட்டொகுதி உறுப்பினர்களின் பெயர் களையும்,

(vi) அங்கு பணிபுரியும் 05 அதிஉயர் பணியாட்டொகுதி உறுப்பினர்களின் பெயர்கள், அவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் சம்பளம் மற்றும் இதர நன்மைகள் ஆகியவற்றுடனும்

அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது நடைமுறையில் உள்ள வட்டி வீதத்தையும்,

(ii) வழங்கப்படும் கடனின் நூற்று வீதத்தை வட்டி வீதங்களுடனும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0023/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2007 ஜனவரி 12 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (அ. பொ. மு. கு) அறிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் ஒப்புறுதிப்படுத்தும் சான்றுகளையும்,

(ii) அ. பொ. மு. கு. வின் முன்னைய அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் பட்ட திகதியையும்,

(iii) அதில் குறிப்பிடப்பட்ட அரச நிறுவனங்களுக்கு எதிராக மேற்கொள்ளப் பட்ட நடவடிக்கைக்கான ஒப்புறுதிப்படுத்தும் சான்றையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) சமர்ப்பிக்கபட்ட அ. பொ. மு. கு. வின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்களுக்கு உதிராக நடவடிக்கை மேற்கொள்ளாமைக்கான காரணங்களை அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0349/'08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— அனர்த்த முகாமைத்துவ, மனித உரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2004 ஆம் ஆண்டு டிசம்பர் 26 ஆம் திகதி நிகழ்ந்த சுனாமி பேரழிவின் போது கஹவ, அகுரல, 58/1 ஆம் இலக்க முகவரியில் வசித்துவந்த திரு. ஆர். எல். எச். ஹேமசந்திர என்பவரின் மனைவி திருமதி. நாமல் ரம்பலதா சில்வாவும் இவரது தாயாரும் மரணமடைந்தார்கள் என்பதையும்,

(ii) இவர்கள் வசித்துவந்த வீடு அழிவடைந்ததென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இவ்வுயிர்ச்சேதங்களுக்கும் வீட்டிற்கும் சொத்திற்கும் ஏற்பட்ட சேதத்திற்கும் இவருக்கு இற்றைவரை எவ்வித நட்ட ஈட்டுத்தொகையும் வழங்கப்படாமைக்கான காரணம் யாதென்பதை அவர் இச்சபைக்கு குறிப்பிடுவாரா?

(இ) இவருக்கு குறித்த நட்ட ஈட்டுத்தொகையை வழங்குவதற்கு அவர் நடவடிக்கை யெடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0350/'08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) கொழும்பு, கிருலப்பணை, எலன் மெதினியாராம புனிதப் பகுதியின் காணித்துண்டொன்றில் எவரேனும் ஒருவருக்கு அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான கட்டிடமொன்றை அமைப்பதற்கு அனுமதி வழங்கப் பட்டுள்ளதா என்பதையும்,

(ii) இல்லையெனில் பலாத்காரமாக மேற்படி காணி கைப்பற்றப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்குக் குறிப்பிடுவாரா?

(ஆ) எலன் மெதினியாராமவில் வசித்துவந்த தேரரை மேற்படி விஹாரைக்கு செல்லு வதற்கு அனுமதிக்காமல் குண்டர்கள் சிலர் இடையூறு விளைவிக்கின்றார்கள் என்பதை அவர் அறிவாரா?

(இ) மஹாநாயக்க தேரரின் அனுமதியின்றி மேற்படி குண்டர்கள் “விஹாரை செயல் நிறைவேற்று சங்கம்” எனும் பெயரில் சங்கமொன்றை அமைத்து அதனூடாக அரசியல் நடவடிக்கைகளுக்காக இவ்விஹாரைக்குரிய காணியைப் பயன்படுத்து கின்றார்கள் என்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) மேற்படி விஹாரைக்குரிய காணியை அரசியல் நடவடிக்கைகளுக்காகப் பயன் படுத்துவதிலிருந்து விடுவித்துத் தருவதற்கு அவர் தேவையான நடவடிக்கையை மேற்கொள்வாரா?

(உ) இன்றேல், ஏன்?

0351/'08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) வலப்பனே, நவநகரம் முகவரியில் வசிக்கும் திரு. டப்லியு. எம். பியசேன இலங்கைப் போக்கு வரத்து சபை வலப்பனே டிப்போவில் பணிபுரிந்தா ரென்பதையும்,

(ii) 2004.11.30 ஆம் திகதி இவர் ஓய்வு பெறச்செய்யப்பட்டுள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இவருக்குரிய சேவைப்பணிக்கொடை வழங்கப்படாதது ஏனென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இவருக்குரிய சேவைப்பணிக்கொடையை வழங்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0470/ '08

கௌரவ விஜித ரணவீர,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2007 டிசம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறு அம்பாந்தோட்டை மாவட்டத்தில் வீரகெட்டிய கமநல சேவை நிலைய அதிகார பிரதேசத்தில் உள்ள வயல்களின் அளவு எத்தனை ஏக்கர்,

(ii) அவற்றிற்கிடையில் பெரிய நீர்பாபசனம், சிறிய நீர்ப்பாசனம், மானாவாரி என்றவகையில் பாசனம் பெறும் நிலத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவாரா?

(ஆ) (i) 2007 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்தில் கமத்தொழில் செய்கின்ற குத்தகை விவசாயிகளின் எண்ணிக்கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(ii) காணி உரிமையுடைய விவசாயிகளின் எண்ணிக்கையும், பயிர் செய்யப் படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(iii) அது தவிர வேறு விவசாயிகள் இருப்பின் அவ்விவசாயிகளின் எண்ணிக் கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2000 ஆம் ஆண்டின் கமநல அபிவிருத்திச் சட்டம் நடைமுறைப் படுத்தப் பட்டதன் பின்னர் 2007.12.31 வரையிலான காலப்பகுதியில் குத்தகை விவசாயி இறந்து போனதன் காரணமாக காணி உரிமையாளருக்கும் பின்னுரிமையாளருக்கும் இடையில் தோன்றியுள்ள பிணக்குகளின் அளவு எவ்வளவு,

(ii) கமநல சேவை உதவி ஆணையாளருக்கு சம்பந்தப்பட்ட அதிகாரப் பிரதேசத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ள குத்தகை விவசாயிகளின் பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) குத்தகை விவசாய உரிமை பெற்ற பின்னுரிமையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

0471/'08

கௌரவ விஜித ரணவீர,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2007 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறு அம்பாந் தோட்டை மாவட்ட த்தில் மீகஸ்ஆர கமநல சேவை நிலைய அதிகார பிரதேசத்தில் உள்ள வயல் களின் அளவு எத்தனை ஏக்கர்,

(ii) அவற்றிற்கிடையில் பெரிய நீர்பாபசனம், சிறிய நீர்ப்பாசனம், மானாவாரி என்றவகையில் பாசனம் பெறும் நிலத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவாரா?

(ஆ) (i) 2007 டிசம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்தில் கமத்தொழில் செய்கின்ற குத்தகை விவசாயிகளின் எண்ணிக் கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(ii) காணி உரிமையுடைய விவசாயிகளின் எண்ணிக்கையும், பயிர் செய்யப் படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(iii) அது தவிர வேறு விவசாயிகள் இருப்பின் அவ்விவசாயிகளின் எண்ணிக் கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2000 ஆம் ஆண்டின் கமநல அபிவிருத்திச் சட்டம் நடைமுறைப் படுத்தப் பட்டதன் பின்னர் 2007.12.31 வரையிலான காலப்பகுதியில் குத்தகை விவசாயி இறந்து போனதன் காரணமாக காணி உரிமையாளருக்கும் பின்னுரிமையாளருக்கும் இடையில் தோன்றியுள்ள பிணக்குகளின் அளவு எவ்வளவு,

(ii) கமநல சேவை உதவி ஆணையாளருக்கு சம்பந்தப்பட்ட அதிகாரப் பிரதேசத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ள குத்தகை விவசாயிகளின் சிக்கல் களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) குத்தகை விவசாய உரிமை பெற்ற பின்னுரிமையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல் ஏன்?

## 2008, செத்தெம்பர் 11, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0728/'08

கௌரவ என். டி. என். பி. ஜயசிங்க,— சமூக சேவைகள், சமூக நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) நுவரெலியா மாவட்டத்தில் தற்போது இயங்கி வருகின்ற அரச சார்பற்ற அமைப்புக்கள் யாவை,

(ii) அவற்றின் முகவரிகள் யாவை,

(iii) அவ்வமைப்புக்கள் தற்போது இயங்கிவருகின்ற துறைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) கடந்த 10 ஆண்டுகளில் மேற்படி ஒவ்வோர் அரச சார்பற்ற அமைப்பினாலும் அமுலாக்கப்பட்ட கருத்திட்டங்கள் யாவை,

(ii) அதற்காக ஒதுக்கப்பட்ட பணத்தொகை தனித்தனியாக எவ்வளவு

எனும் விபரங்களை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) மேற்படி அரச சார்பற்ற அமைப்புக்களின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்காக அரச நடவடிக்கை முறையேதும் உள்ளதாவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0729/ '08

கௌரவ என். டி. என். பி. ஜயசிங்க,— வர்த்தகம், சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவுத்துறை, நுகர்வோர் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) நுவரேலியா மாவட்டத்திலுள்ள கூட்டுறவுத் திணைக்களத்திற்குச் சொந்தமான பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் யாவை,

(ii) மேற்படி ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் சொந்தமான அசையும் மற்றும் அசையா ஆதனங்கள் யாவை,

(iii) மேற்படி நிறுவனங்கள் மூலமாகப் பேணிவரப்படுகின்ற கிளைகளின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளவு,

(iv) அந்நிறுவனங்களில் நிலவுகின்ற கடன்சுமை அளவு தனித்தனியாக எவ்வளவு,

(v) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திற்கும் சமுர்த்தி இயக்கத்திலிருந்து கிடைக்க வேண்டிய நிலுவைப்பணத் தொகை எவ்வளவு,

(vi) இந்நிறுவனங்களைக் கட்டியெழுப்ப கூட்டுறவுத்துறை அமைச்சினால் வேலைத்திட்டமொன்று வகுக்கப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0730/ '08

கௌரவ என். டி. என். பி. ஜயசிங்க,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு.—

(அ) (i) நுவரெலியா மாவட்டத்தின் ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கமநல சேவைகள் நிலையங்களின் எண்ணிக்கை யாது,

(ii) ஒவ்வொரு கமநல சேவை நிலையத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ள நெல், மரக்கறி, மலர்கள், பழங்கள் மற்றும் ஏனையவற்றைப் பயிரிடும் விவசாயி களின் எண்ணிக்கை தனித்தனியாக எவ்வளது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற 'உரமானியம்' எந்தெந்த விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றது,

(ii) இதன்பொருட்டு ஆண்டுதோறும் வழங்கப்படுகின்ற பசளையின் அளவு மற்றும் அதற்காக செலவிடப்படும் பணத்தொகை யாது

என்பதை அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(இ) (i) மரக்கறிச் செய்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்றதா,

(ii) மரக்கறிச் செய்கையாளர்களைப் பாதுகாக்க சம்பந்தப்பட்ட அமைச்சிடம் வழிமுறைகள் இருக்கின்றனவா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0153/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2007ஆம் ஆண்டுக்கான திருத்தியமைக்கப்பட்ட வரவு செலவு திட்டத்தின் (2008 வரவு செலவு மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு) மூலம் அனைத்து மாகாணங்களிலும் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நீர் வழங்கல் திட்ட த்திற்காக 2625 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2007 ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0154/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2006 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தின் மூலம், வீடமைப்பு அபிவிருத்திக்கான உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் என்ற வகையில் 450 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டி ருந்தது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2006 ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) அப்பணத்தைப் பயன்படுத்தி செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் யாவை,

(iii) பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0155/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2007ஆம் ஆண்டுக்கான திருத்தியமைக்கப்பட்ட வரவு செலவு திட்டத்தின் (2008 வரவு செலவு மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு) மூலம் சுனாமி உதவி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் 118 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2007 ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) அப்பணத்தைப் பயன்படுத்தி செயற்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் யாவை,

(iii) பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0026/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) நுரைச்சோலைக் கருத்திட்டத்திற்கான ஆரம்பத்தில் உள்ளவாறான செலவினையும் இன்றுள்ளவாறான செலவினையும் அவர் இச்சபைக்கு அறியத் தருவாரா?

(ஆ) (i) இக்கருத்திட்டத்திற்கு பணம் வழங்கும் நாடு அல்லது நிறுவனத்தின் பெயரினையும்,

(ii) கடன் வழங்குவதற்கான நிபந்தனைகளையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) தேய்மானம் அடங்கலாக ஓர் அலகிற்கான செலவினை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0041/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2006 ஆம் ஆண்டு சனவரி 01 ஆம் திகதி முதல் இன்றுவரை மேதகு சனாதிபதி அவர்களினால் அல்லது அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்களின் எண்ணிக்கையையும்,

(ii) இவ் ஆணைக்குழுக்களின் நோக்கம் மற்றும் அவற்றின் தற்போதைய நிலையையும்,

(iii) இன்றுவரை இவ் ஆணைக்குழுக்களை கொண்டு நடாத்துவதற்கு ஏற்பட்ட செலவை ஆணைக்குழு வாரியாகவும்,

(iv) இவ் ஆணைக்குழுக்களுக்கு தலைமை வகிக்கின்ற நபர்களது பெயர்களையும்

அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஆ) மேற்குறிப்பிட்ட ஆணைக்குழுக்களினால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அறிக்கைகள் தொடர்பில் என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படும்?

(இ) இன்றேல், ஏன்?

0045/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— பெற்றோலியம், பெற்றோலிய வள அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2006 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டுவரை இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மொத்த இலாபத்தையும்,

(ii) லீற்றர் ஒன்றுக்கான மொத்த விற்பனைச் செலவு எவற்றை உள்ளடக்கி யுள்ளது என்பதையும்,

(iii) சேரும் இலாப எல்லையையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) அந்தக் காலப்பகுதியில் விற்பனை செய்யப்பட்ட பெற்றோல், டீசல், உலை எண்ணெய், மண்ணெண்ணெய் மற்றும் விமான எரிபொருள் லீற்றர்களின் அளவையும்,

(ii) அவற்றின் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட அளவையும் இறக்குமதி செய்யப்பட்ட அளவையும் அவற்றுக்கான செலவு மற்றும் இலாப எல்லை ஆகியவற்றுடனும்

அவர் வெவ்வேறாக இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0352/'08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) கண்டி, அருப்பலவத்த வீதி, 23 ஆம் இலக்க முகவரியில் வதியும் திரு. கே. பி. பீ. முதன்னாயக்க 1991.11.14 ஆம் திகதி முதல் இலங்கை மத்திய வங்கி தலைமைய கத்தில் உணவகப் பரிசோதகராக சேவையில் சேர்ந்து 1993.05.01 ஆம் திகதி முதல் தொழிலில் நிரந்தரமாக்கப்பட்டுள்ளார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) மத்திய வங்கியை நவீனமயமாக்கும் கருத்திட்டத்தின் கீழ் இவர் சுயவிருப்பத்தில் இளைப்பாறுவதற்காக 2001.11.15 ஆம் திகதி இராஜிநாமா விண்ணப்பத்தை ஒப்படைத்ததோடு, அதிலிருந்து 04 நாட்களின் பின்னர் அதாவது 2001.11.19 ஆம் திகதி மீண்டும் விண்ணப்பத்தை வாபஸ் பெற்றுக்கொண்டதற்கான கடிதத்தை நிறுவனத் தலைவருக்கு ஒப்படைத்துள்ளாரென்பதை அவர் ஏற்றுக் கொள்வாரா?

(இ) (i) திரு. முதன்னாயக்க சுயவிருப்பத்தில் இளைப்பாறுவதற்காகச் சமர்ப்பித்த விண்ணப்பத்தை மீண்டும் வாபஸ் பெறுவதற்காக விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொள்ளாததன் காரணம் யாது,

(ii) இளைப்பாறுவதற்குத் தேவையான 10 வருட சேவையைப் பூர்த்தி செய்துள்ள போதும் இவருடைய ஓய்வூதியத்தைக் கூட இல்லாதொழித்திருப்பதன் காரணம் யாது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இவருடைய சேவைக்காலத்தை நீடிக்க அவர் உரிய நடவடிக்கை எடுப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

0354/ '08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2003 ஆம் ஆண்டிலிருந்து புத்தசாசன அமைச்சின் (தற்போதைய மத அலுவல்கள் அமைச்சு) கீழ் அமுலாக்கப்பட்ட புண்ணிய கிராம கருத் திட்டத்தின் மதியுரையாளராகச் செயலாற்றிய வண. பலப்பிட்டியே சிறி சீவலி தேரா மேற்படி பதவியிலிருந்து நீக்கப்பட்டமைக்கான காரணம் யாது,

(ii) நான்கு வருடங்களாக வார இறுதியிலும் கஷ்டப்பிரதேசக் கிராமங்களில் 300 நிகழ்ச்சித் திட்டங்களில் பங்கேற்றுள்ள சீவலி தேரரை நீக்கிவிட்டு அவருக்குப் பதிலாக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்,

(iii) அது யாருடைய விதப்புரையின் பேரில்

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இவ்விதம் நியமிக்கப்பட்டுள்ளவரின் கல்வி மற்றும் மதத் தகைமைகள் யாவை,

(ii) பலப்பிட்டியே சிறி சீவலி தேரரை மீண்டும் மேற்படி பதவிக்கு நியமிப்பதற்கு நடவடிக்கையெடுப்பாரா

என்பதை அவர் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0355/ '08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பாதுக்க, போப்பே உடகம, இல. 52 முகவரியில் வதியும் திரு. எஸ். பி. ஆரியரத்ன என்பவரால் உரிமமின்றி அனுபவித்து வருகின்ற காணியில் 02 பலாமரங்களும் காட்டு ஈரப்பலா மரமொன்றும் எவரேனுமொருவரால் கள்ளத்தனமாக தறித்து எடுத்துச்செல்லப்பட்டுள்ளதென்பதையும்,

(ii) இது சம்பந்தமாக 2007.01.06 ஆம் திகதி பாதுக்க பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இவரது இந்த முறைப்பாடு விசாரிக்கப்பட்டு சட்டநடவடிக்கைகள் மேற்கொள்ளப் படாமைக்கான காரணம் யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) அனுமதிபெறாமல் இவ்வெட்டு மரங்களைத் தறித்து எடுத்துச் சென்றவர்கள் யாவரென்பதை வெளிக்கொணர நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0472/ '08

கௌரவ விஜித ரணவீர,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2007 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறு அம்பாந் தோட்டை மாவட்டத்தில் வலஸ்முல்ல கமநல சேவை நிலைய அதிகார பிரதேசத்தில் உள்ள வயல்களின் அளவு எத்தனை ஏக்கர்,

(ii) அவற்றிற்கிடையில் பெரிய நீர்ப்பாசனம், சிறிய நீர்ப்பாசனம், மானாவாரி என்றவகையில் பாசனம் பெறும் நிலத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவு,

என்பதை அவர் இச்சபைக்கு அறிவாரா?

(ஆ) (i) 2007 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்தில் கமத்தொழில் செய்கின்ற குத்தகை விவசாயிகளின் எண்ணிக்கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(ii) காணி உரிமையுடைய விவசாயிகளின் எண்ணிக்கையும், பயிர் செய்யப் படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(iii) அது தவிர வேறு விவசாயிகள் இருப்பின் அவ்விவசாயிகளின் எண்ணிக் கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2000 ஆம் ஆண்டின் கமநல அபிவிருத்திச் சட்டம் நடைமுறைப் படுத்தப் பட்டதன் பின்னர் 2007.12.31 வரையிலான காலப்பகுதியில் குத்தகை விவசாயி இறந்து போனதன் காரணமாக காணி உரிமையாளருக்கும் பின்னுரிமையாளருக்கும் இடையில் தோன்றியுள்ள பிணக்குகளின் அளவு எவ்வளவு,

(ii) கமநல சேவை உதவி ஆணையாளருக்கு சம்பந்தப்பட்ட அதிகாரப் பிரதேசத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ள குத்தகை விவசாயிகளின் பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) குத்தகை விவசாய உரிமை பெற்ற பின்னுரிமையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0473/ '08

கௌரவ விஜித ரணவீர,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2007 டிசம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறு அம்பாந்தோட்டை மாவட்டத்தில் கட்டுவன கமநல சேவை நிலைய அதிகார பிரதேசத்தில் உள்ள வயல்களின் அளவு எத்தனை ஏக்கர்,

(ii) அவற்றிற்கிடையில் பெரிய நீர்பாபசனம், சிறிய நீர்ப்பாசனம், மானாவாரி என்றவகையில் பாசனம் பெறும் நிலத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவாரா?

(ஆ) (i) 2007 டிசம்பர் 31 ஆம் திகதியன்று உள்ளவாறு சம்பந்தப்பட்ட அதிகார பிரதேசத்தில் கமத்தொழில் செய்கின்ற குத்தகை விவசாயிகளின் எண்ணிக் கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(ii) காணி உரிமையுடைய விவசாயிகளின் எண்ணிக்கையும், பயிர் செய்யப் படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு,

(iii) அது தவிர வேறு விவசாயிகள் இருப்பின் அவ்விவசாயிகளின் எண்ணிக் கையும் பயிர் செய்யப்படுகின்ற வயல்களின் ஏக்கர் அளவும் எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) 2000 ஆம் ஆண்டின் கமநல அபிவிருத்திச் சட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டதன் பின்னர் 2007.12.31 வரையிலான காலப்பகுதியில் குத்தகை விவசாயி இறந்து போனதன் காரணமாக காணி உரிமை யாளருக்கும் பின்னுரிமையாளருக்கும் இடையில் தோன்றியுள்ள பிணக்கு களின் அளவு எவ்வளவு,

(ii) கமநல சேவை உதவி ஆணையாளருக்கு சம்பந்தப்பட்ட அதிகாரப் பிரதேசத்திலிருந்து அறிவிக்கப்பட்டுள்ள குத்தகை விவசாயிகளின் பிணக்கு களின் எண்ணிக்கை எவ்வளவு,

(iii) குத்தகை விவசாய உரிமை பெற்ற பின்னுரிமையாளர்களின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0474/ '08

கௌரவ விஜித ரணவீர,— கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) லுணுகம்வெஹெர பிரதேச செயலகப் பிரிவில் அமைந்துள்ள 'கடவர' என அழைக்கப்படுகின்ற புல்வெளிக்கான உரிமை யாருக்குள்ளது என்பதையும்,

(ii) இதனைப் பதிவு செய்த அரச நிறுவனத்திற்கு பால் உற்பத்தியாளர்களால் 2005 சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2007 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை செலுத்தப்பட்டுள்ள வரித்தொகையின் அளவு வருட ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(iii) இப்புல்வெளியின் பொறுப்பு கால்நடை வளர்ப்பு விவசாய அமைப் பொன்றுக்கு கையளிக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iv) அது எவ்வடிப்படையில் என்பதையும்,

(v) கையளித்தவர் மற்றும் கையளிக்கப்பட்டோர் யாவர் என்பதையும்,

(vi) இந்த அமைப்பின் பெயர், அதில் பிரதான பதவிகளை வகிப்போரின் பெயர்கள் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்,

(vii) அங்கத்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அந்த அமைப்பிற்கு புல்வெளி கையளிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இப்புல்வெளியின் அபிவிருத்திக்காக இதுவரை பயன்படுத்தப்பட்டுள்ள அரச மற்றும் அரச சாரா பணத்தொகை குறிப்பிட்ட அபிவிருத்தி நடவடிக்கை களின்படி வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) புல்வெளியினைச் சுற்றி மின்வேலியை நிர்மாணித்தல், முற்புதரை அகற்றி புல் வளர்த்தல் மற்றும் தற்போது பயன்படுத்தப்படாத வாவிகளை மறு சீரமைத்தல் என்பவற்றுக்காக பணம் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்,

(iii) அது எக்கால வரையறைக்குள் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) 'கடவர' புல்வெளி தொடர்பான முழுமையான பின்னணியைக் கொண்ட ஓர் அறிக்கையினை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

---

## 2008, செத்தெம்பர் 12, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0731/ '08

கௌரவ என். டீ. என். பி. ஜயசிங்க,— வாழ்க்கைத்தொழில், தொழில்நுட்பப் பயிற்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) நுவரெலியா மாவட்டத்தில் அம்பகமுவ பிரதேசச் செயலாளர் பிரிவில் ஹட்டன் நகரத்துக்கு அயலில் அமைந்துள்ள "தொண்டமான் தொழிற் பயிற்சி நிலையம்" இந்த அமைச்சுக்குச் சொந்தமானதா,

(ii) அவ்வாறாயின் அது எவ்வாண்டில் அமைக்கப்பட்டது,

(iii) இதற்காக, செலவு செய்யப்பட்ட முழுத்தொகை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இந்நிலையத்தின் ஆரம்பம் தொடக்கம் இதுவரை தொழில் நுட்பப் பயிற்சிக்காகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) தற்போது இந்நிறுவனம் மூடப்பட்டிருப்பதன் காரணம் யாது,

(iii) இதைத் திறப்பதற்கு இவ்வமைச்சினால் ஏதேனும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

0732/'08

கௌரவ என். டீ. என். பி. ஜயசிங்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) ஹங்குரன் கெத்த பிரதேச 10 சமுர்த்தி வங்கிகள் ஊடாக "தியதிலக்க அப்பரல்" என்ற பெயரில் ஆடைத்தொழிற்சாலைகளை ஆரம்பிக்க கடன் வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(ii) கடன் பெற்றவர்களின் பெயர்கள் மற்றும் வழங்கப்பட்ட கடன் தொகைகளை யும்,

(iii) குறிப்பிட்ட ஆடைத் தொழிற்சாலைகளின் ஆரம்ப உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்,

(iv) அவர்களது சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(v) நிர்மாணப் பணிகள் மற்றும் இயந்திர பொறித்தொகுதிகளுக்கு செலவிடப் பட்ட பணம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) மேற்கூறிய ஆடைத் தொழிற்சாலை பிற்காலத்தில் வேறு நபர்களுக்கு விற்கப்பட் டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(இ) (i) அவ்வாறெனின், அது எத்தொகைக்கு விற்கப்பட்டது என்பதையும்,

(ii) விற்று கிடைத்த பணம் சமுர்த்தி வங்கிகளினால் பெறப்பட்ட கடனை தீர்க்க பயன்படுத்தப்பட்டதா என்பதையும்,

(iii) மேலும் செலுத்தப்பட உள்ள பணமும் குறிப்பிட்ட செலுத்தல்களும் தொடர்ச் சியாக மேற்கொள்ளப்படுகின்றதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0156/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2007ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் (2008 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு) மூலமாக, வீடமைப்பு அபிவிருத்திக்கான உதவி நிகழ்ச்சித்திட்டங்கள் என்ற வகையில் 198 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதற்கிணங்க 2007 ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) அப்பணத்தைப் பயன்படுத்தி நிறைவேற்றிய கருத்திட்டங்கள் யாவை,

(iii) பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0157/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2007ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் (2008 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு) மூலமாக, தெரிவு செய்யப்பட்ட 119 பிரதேச செயலகப் பிரிவுகளில் ஒரு கிராமத்திற்கு 25 வீதம் வீடுகள் நிர்மாணிக்கும் கருத்திட்டத்திற்காக 600 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2007 ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) கருத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்ட கிராமங்கள் யாவை,

(iii) பயனாளிகளின் எண்ணிக்கை எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0158/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2006 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் லுணாவ சுற்றாடல் மற்றும் சமுதாய அபிவிருத்திக் கருத்திட்டத்திற்காக ரூபா 1,110,923,000 ஒதுக்கப்பட்டிருந்ததென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2006 ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) அது எத்தகைய பணிகளுக்கானது

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0048/'08

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) ஹொட்டேல் டிவெலெப்பேர்ஸ் (லங்கா) லிமிட்டெட்டின் ஹில்ரன் ஹொட்டல் அமைந்துள்ள 7 ஏக்கர் நிலம், 1999 ஜுலை விசேட மானியங்கள் இல 673 மற்றும் 674 என்பவற்றின் ஒப்படைப்பின் பிரகாரம் அரச உறுதியுரிமையில் உள்ளது என்பதையும்,

(ii) இந்நிலம் மீள அரச உறுதியுரிமைப்படுத்தப்பட்டது என்பதையும்,

அவர் அறிவாரா?

(ஆ) (i) 1999 ஜுலை தொடக்கம் எச்.டி.எர் இனால் இந்நிலத்தைப் பயன்படுத்தியமைக்காகச் செலுத்தப்பட்ட தொகை எவ்வளவு என்பதையும்,

(ii) அவ்வாறு செலுத்தப்படவில்லையானால், அதேவிதமான சலுகை ஏனையோருக்கும் வழங்கப்படுமா என்பதையும்,

(iii) எச்.டி.எல் வங்கறோத்து அடைந்திருப்பதால், அதை முடிவுறுத்துவதற்கு விண்ணப்பமொன்று தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதா என்பதையும்,

(iv) 2007 மே 03 ஆம் திகதிக்குப் பின்னர் எச்.டி.எல் இனை மூடிவிடுவதற்கு அமைச்சரவை எதிர்ப்புத் தெரிவித்துள்ளதா என்பதையும்,

(v) அவ்வாறாயின், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கக் கம்பனிச் சட்டத்திற்கமைய, அரச கடன்களின் மீதான குறையும் இடைவெளித் தொகையை அரசிற்குச் செலுத்துதற்கான தனிப்பட்ட பொறுப்பை அமைச்சரவை ஏற்குமா என்பதையும்,

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0051/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) 2001 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை அரசாங்கத்தினால் பெறப்பட்ட மொத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களை வருடாந்த அடிப்படையிலும்,

(ii) வட்டி வீதத்தையும் மீளச்செலுத்தல் காலத்தையும்,

(iii) இந்தக் கடன்கள் பெறப்பட்டமைக்கான காரணத்தையும்,

(iv) இன்றுள்ளவாறு நாட்டின் மொத்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடன்களையும்,

(v) இக்கடன்கள் மீண்டும் செலுத்தப்பட வேண்டிய திகதியையும்,

(vi) செலுத்த வேண்டிய மொத்த வட்டியை அவற்றைச் செலுத்த வேண்டிய திகதிகளுடனும்,

(vii) 2001 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை வட்டிச்செலவினத்தை வருடாந்த அடிப்படையிலும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) மேலே உள்ளவாறு செலுத்தித்தீர்க்கப்பட்ட கடன்களையும் (மூலதனம் மற்றும் வட்டி),

(ii) ஆண்டொன்றுக்குச் செலுத்த வேண்டிய மொத்தத் தொகையையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இந்தக் கடன்தீர்த்தல் எந்த வருவாய்களிலிருந்து செலுத்தப்படும் என்பதை அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0062/ '08

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் பாராளுமன்றத்திற்குக் கொண்டுவராது, தேசிய வரவுசெலவுத் திட்ட திணைக்களம் மூலமாக நிதி ஒதுக்கீடு செய்வதற்கு திறைசேரியின் செயலாளருக்கு அனுமதி வழங்கும் 6வது வாசகமொன்றை 2005, 2006 ஆம் ஆண்டுக்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் அறிமுகப்படுத்தியதென்பதையும்,

(ii) இது பொது நிதி மீதான பாராளுமன்றத்தின் மேலாண்மையை கபடமான முறையில் கவர்ந்து கொள்வதோடு அதனை சிதைவடையவும் செய்கிறதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) இவ்வுறுப்புரிமையைப் பயன்படுத்தி 2006, 2007 ஆம் ஆண்டுகளில் திறைசேரியின் செயலாளரினால் ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும் அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) (i) எந்நோக்கத்தின் நிமித்தம் அவை பயன்படுத்தப்பட்டன என்பதையும்,

(ii) அவற்றின் தலைப்பு இலக்கம் மற்றும் திட்டவட்டமான கருத்திட்ட குறியீடு ஆகியவற்றை அவற்றிற்கான விளக்கங்களுடன் அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0356/ '08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதியமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பிலிமதலாவ, மொலதண்ட, மெத்தேகொடே கெதர வத்த, இலக்கம் 96/2 எனும் முகவரியில் வதியும் திரு. என்.வை. விமலதாச 1960 ஆம் ஆண்டிலிருந்து கண்டிய கிராமிய ஆணைக்குழுவில் தொழிலாளியாகப் பணியாற்றினாரென்பதையும்,

(ii) 1987 ஆம் ஆண்டில் ரோலர் சாரதியாக ஓய்வுபெறச் செய்விக்கப்பட்டார் என்பதையும்,

(iii) இவருக்கு 1977 முதல் 1987 வரையான பத்தாண்டு காலத்திற்கு மாத்திரமே ஓய்வூதியம் உரித்தாகியுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) இவர் இந்நிறுவனத்தில் பணியாற்றிய 1960 முதல் 1977 வரையான காலப்பகுதி சம்பந்தமாக ஓய்வூதியம் கணிக்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) 1960 முதல் 1987 வரையான இவரது இடையறாத சேவைக்காலத்தைக் கவனத்திற்கொண்டு இவரது முழுமையான ஓய்வூதியத்தை வழங்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0357/ '08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும், உள்ளக நிர்வாக அமைச்சரும், பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) மினிப்பே பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள உடவெல குடியேற்ற உத்தியோகத்தர் பகுதியில் பரவன்தன ஒய உப தபால் அலுவலகம் அமைந்துள்ள அரச காணியின் ஒரு பகுதியில் அனுமதியின்றி தனிப்பட்ட ஒரு நபர் வேலியமைத்து அனுபவித்து வருகின்றார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) பரவந்தன ஒய ஐக்கிய நலன்புரி மரண சகாய சங்கக் கூட்டமொன்றை அமைப்பதற்கு நீண்ட கால வரி உரிமமொன்றினால் இக்காணியைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதெனவும்,

(ii) இவ்விடத்திற்கு இவ்வனுமதியற்ற அனுபவிப்பு தடையாகவுள்ளது என்பதையும்,

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இக்காணியை, அனுமதியின்றி அனுபவிப்பவரை அகற்றி பரவந்தன ஒய ஐக்கிய நலன்புரி மரண சகாய சங்கத்திற்கு வழங்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0358/ '08

கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) அப்புதலை தேர்தல் தொகுதியில் நிக்கபெத்த பெரகல, பஹல பிலெக்வுட்கமயைச் சேர்ந்த திரு.ஆரியரத்ன 'மிரிதிய' எனும் பெயரில் அலங்கார மீன்கள் மற்றும் மலர்கள் விநியோகிக்கும் உல்லாசப் பிரயாண நிலையமொன்றை நடாத்திச் சென்ற சுமார் 2.5 ஏக்கர் காணி ஹல்தும் முல்ல பிரதேச செயலாளரினால் சுவீகரிக்கப்பட்டு மீண்டும் வேறொருவருக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அநீதியான முறையில் இக்காணியை சுவீகரித்து, அங்கிருந்த கட்டிடங்கள், அலங்கார மீன் வளர்ப்பு மற்றும் மலர் பயிர்ச்செய்கை என்பன அழிக்கப்பட்டுள்ளதென்பதையும்,

(ii) உல்லாசப்பிரயாணத்துறையினூடாக வாழ்ந்த இவர் மிகவும் அநாதரவான நிலைக்கு ஆளாகியுள்ளார் என்பதையும்,

அவர் அறிவாரா?

(இ) இந்த உல்லாசப் பிரயாண நிலையத்தை மீண்டும் கொண்டு நடாத்த இவருக்கு இக்காணியை வழங்க அவர் நடவடிக்கை எடுப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

0494/ '08

கௌரவ விஜித ஹேரத்,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான எத்தனை வாகனங்கள் வெளித்தரப்பினருக்கு விடுவிக்கப்பட்டுள்ளன,

(ii) இவ்வாகனங்களின் ரகம், இலக்கம் மற்றும் விடுவிக்கப்பட்ட திகதி ஆகியவை யாவை,

(iii) எந்தெந்த நிறுவனங்களுக்கு அல்லது நபர்களுக்கு எவ்வடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளது,

(iv) இணைக்கப்பட்டிருப்பின் அவர்களின் பெயர் மற்றும் பதவி ஆகியவை யாவை,

(v) இவ்வாகனங்களை விடுவிப்பதற்கு உரிய அனுமதி பெறப்பட்டிருந்ததா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை மகாவலி அதிகார சபைக்குச் சொந்தமான கட்டிடங்கள் வாடகை அல்லது குத்தகை அடிப்படையில் வெளித்தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ளதா,

(ii) இக்கட்டிடங்களின் முகவரி மற்றும் அதற்கான வாடகை அல்லது குத்தகை அடிப்படை யாது,

(iii) வழங்கப்பட்டுள்ள நிறுவனங்கள் அல்லது நபர்களின் பெயர் மற்றும் முகவரி ஆகியவை யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0495/'08

கௌரவ விஜித ஹேரத்,— கமத்தொழில் அபிவிருத்தி, கமநல சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) (i) இலங்கை மகாவலி அதிகார சபையின் கீழ் உள்ள துணைக்கம்பனிகளின் எண்ணிக்கை எவ்வளவு,

(ii) அவ்வொவ்வொரு கம்பனியும் அமைக்கப்பட்டதன் நோக்கம் யாது,

(iii) அவ்வொவ்வொரு துணைக்கம்பனியின் பணிப்பாளர் சபையினதும் பணியாட்டொகுதியினதும் பெயர், பதவி, சம்பளம் மற்றும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அடிப்படை ஆகியவை யாவை,

(iv) அக்கம்பனிகளுக்கு இலங்கை மகாவலி அதிகார சபையின் மூலம் வழங்கப்பட்டுள்ள பல்வேறு வகையான நிதிவசதிகள், வாகனங்கள், இயந்திரங்கள், கட்டிடங்கள் மற்றும் ஏனைய வசதிகள் ஆகியவை

என்பதை அவர் இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட கம்பனிகளிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேறுகின்றதா,

(ii) அக்கம்பனிகள் வருடாந்த கணக்குகளை ஒழுங்காகப் பேணி சிறந்த நிதி ஒழுங்குகளைப் பேணுகின்றனவா

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0496/'08

கௌரவ விஜித ஹேரத்,— நீர்ப்பாசன, நீர் முகாமைத்துவ அமைச்சரும் துறைமுகங்கள், விமான சேவைகள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கை கப்பல் இடவசதி ஒதுக்கீட்டு மத்திய பணியகத்தின் (மத்திய கேள்வுப் பணியகம்) கப்பல்சார் அபிவிருத்தி நிதியத்துக்காக பல்வேறு கப்பல் முகவர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய, ஆயினும் 2002 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை நிலுவையாகவுள்ள பணத்தொகை எவ்வளவென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி பணம் அறவிடப்பட வேண்டிய கப்பல் முகவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் பணத்தொகை எவ்வளவென்பதை அவர் விபரமாக இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) கப்பல்சார் அபிவிருததி நிதியத்திற்குச் சொந்தமான பணம் சென்ற ஆண்டுகளில் அரச அல்லது வேறு அமைப்புக்களுக்கு மாற்றப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபையில் தெரிவிப்பாரா?

(ஈ) ஆமெனில், அப்பணம் சம்பந்தப்பட்ட திகதிகளில் எந்த அடிப்படையின் கீழ் மாற்றப்பட்டது என்பதை அவ்வமைப்புக்களின் பெயர்களுக்கேற்ப அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

0518/'08

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,— மின்வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கை மின்சார சபை பாவனையாளர்களுக்கான சேவைகளை வழங்கும் போது தேவைப்படும் மின் மானிகளுக்கான பற்றாக்குறை நிலவுவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மின்மானிகள் தொடர்பாக அவ்வாறான பற்றாக்கறை ஏற்படுவதற்கான காரணம் என்ன என்பதையும்,

(ii) மின் மானிகளுக்கான பற்றாக்கறை எந்த ஆண்டிலிருந்து ஏற்பட்டது என்பதையும்,

(iii) இதன் காரணமாக மின்சாரம் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கும் பாவனையாளர்கள் எதிர்நோக்கும் அசௌகரியங்களை நீக்க எடுக்கப்படும் நடவடிக்கைகள் என்ன என்பதையும்,

(iv) இலங்கை மின்சார சபை எந்தெந்த நாடுகள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து மின்மானிகளை இறக்குமதி செய்கின்றது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) பாராளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீடுகளி லிருந்து நிறைவேற்றப்படும் மின்சாரத் திட்டங்களை ஆரம்பித்து வைக்கும் போது இந்த மின்மானி பற்றாக்குறைகளினால் குறிப்பிட்ட திட்டங்களை ஆரம்பித்து வைத்தல் தாமதமடைவதை அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இந்த தாமதங்களை தவிர்ப்பதற்கு அமைச்சு மட்டத்தில் எடுக்கப்படக்கூடிய நடவடிக்கைகள் என்ன என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

---

## 2008, செத்தெம்பர் 23, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0159/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நகர அபிவிருத்தி, புனிதப் பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2007ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் (2008 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு) மூலமாக, நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் நகர அபிவிருத்திக்காக 889 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2007 ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) அது எத்தகைய கருத்திட்டங்களுக்கானது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0160/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நீர்வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2007ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் (2008 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு) மூலமாக, சமுதாய நீர் வழங்கலுக்காக 1940 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2007ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) அது எத்தகைய கருத்திட்டங்களுக்கானது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0161/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2007ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் (2008 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு) மூலமாக, காணி மீட்டல் சபையின் கீழ் கால்வாய்களின் புனரமைப்பிற்கும் பராமரிப் பிற்குமாக 72 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்த தென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2007ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) அது எத்தகைய கருத்திட்டங்களுக்கானது

என்பதை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

## 2008, செத்தெம்பர் 24, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0162/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2007 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் (2008 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு) மூலமாக, லுணாவ சுற்றாடல் மற்றும் சமுதாய அபிவிருத்திக் கருத்திட்டத்திற்காக 1230 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2007ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) அது எத்தகைய கருத்திட்டங்களுக்கானது

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0163/ ’08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— நகர அபிவிருத்தி, புனித பகுதிகள் அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) 2007 ஆம் ஆண்டுக்கான திருத்தப்பட்ட வரவு செலவுத் திட்டம் (2008 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டில் குறிப்பிட்டுள்ளவாறு) மூலமாக, தேசிய பௌதீகத் திட்டமிடல் திணைக்களத்தின் கீழ் புனித பகுதிகள் அபிவிருத்திக்காக 274 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்ததென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) அதன் பிரகாரம் 2007ஆம் ஆண்டில் செலவு செய்த பணம் எவ்வளவு,

(ii) அது எத்தகைய கருத்திட்டங்களுக்கானது

என்பதை தனித்தனியாக அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0164 / ’08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— சுற்றுலாத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,—

(அ) இலங்கை சுற்றுலா சபையின் வாடிக்கையாளர் அலுவலர் பதவிக்கான இரண்டாவது நேர்முகப் பரீட்சை 2007.01.11 ஆம் திகதி நடைபெற்றதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் 2007.01.11 ஆம் தேதியன்று நிலவிய வெற்றிடங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்,

(ii) பதவிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் அங்கீகாரம் கோரப்பட்டிருப்பின் சம்பந்தப்பட்ட எண்ணிக்கை மற்றும் திகதி யாதென்பதையும்,

(iii) 2007.01.11 ஆம் திகதி நடைபெற்ற நேர்முகப் பரீட்சையில் பங்குபற்றிய வர்களின் பெயர், முகவரி மற்றும் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகள் ஆகிய விபரங்கள் யாவையென்பதையும்,

(iv) இரண்டாவது நேர்முகப் பரீட்சையின் போது திறன் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு நியமனம் வழங்கப்படாமைக்கான காரணம் யாதென்பதையும்,

(v) மே மாதம் 07 ஆம் திகதி மேலும் ஒரு நேர்முகப் பரீட்சை நடாத்தப் பட்டமைக்கான காரணம் யாதென்பதையும்,

(vi) இதற்கு 2007.01.11 ஆம் திகதி அழைக்கப்படாதவர்கள் அழைக்கப் பட்டிருப்பின் அதற்கான காரணம் யாதென்பதையும்,

(vii) இவர்களின் பெயர், முகவரி மற்றும் பெற்றுக்கொண்ட புள்ளிகள் யாதென்ப தையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2007.01.11 ஆம் திகதி நடைபெற்ற நேர்முகப்பரீட்சையின் போது 05 ஆம் நிலையை விட பின்னால் இருந்த சுற்றுலா சபைத்தலைவரின் மகள் எம்.என். த அல்விஸ் என்பவரை 2007.05.07 ஆம் திகதிய நேர்முகப் பரீட்சையின் மூலம் முன் நிலையை நோக்கி நகர்த்தி நியமனம் வழங்கப்பட்டுள்ள தென்பதையும்,

(ii) இவ்விடயத்தில் ஜயபிரியா ஆதிஹெட்டி என்பவரை நீக்கியதன் மூலம் தகைமை உடையவர்களுக்கு அநீதியிழைக்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) இந்நிலைமையை நிவர்த்தி செய்வதற்கு அவர் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(உ) இன்றேல், ஏன்?

---

## 2008, செத்தெம்பர் 25, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

0165/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரு மானவரைக் கேட்பதற்கு,—

(அ) பிலியந்தல, கஹபொல, ரெஜிடேல்வத்தயை விற்பனை செய்தல் தொடர் பாகவும் சமரக்கோன் முதுசொத்து தொடர்பாக ஏற்பட்டுள்ள குளறுபடிகள் தொடர் பாகவும் பொது நம்பிக்கை பொறுப்பாளர் திணைக்களத்தில் பொதுச் சொத்துக்கள் தொடர்பாக எழுந்துள்ள பல்வேறு ஊழல்கள் தொடர்பாகவும் 2006 ஆம் ஆண்டில் ஆரம்பகட்ட விசாரணை அறிக்கையொன்று வெளியிடப் பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) சமய அலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள மேற்படி அறிக்கையின் பிரகாரம் குற்றச்சாட்டிற்கு உள்ளாகியவர்கள் தொடர்பாகவும், ஏற்பட்டுள்ள முறைகேடுகள் தொடர்பாகவும் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடி க்கை யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

0166/ '08

கௌரவ லக்ஷ்மன் நிபுணஆரச்சி,— பிரதம அமைச்சரும் உள்ளக நிர்வாக அமைச்சரும் பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சரு மானவரைக் கேட்பதற்கு,—

(அ) (i) பிலியந்தல, ரெஜிடேல் தோட்டத்தின் காணி, முதலீட்டு சபையின் அங்கீகாரம் பெற்ற மிலேனியம் சிட்டி வீடமைப்பு கருத்திட்டத்திற்காக செலிங்கோ டிவலபர்ஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததென்பதையும்,

(ii) மேற்படி கருத்திட்டத்திற்காக இக்காணியை விற்பனை செய்யும் செயற்பாடு, சட்ட விரோதமானதென்றும், சூழலுக்கு குந்தகம் விளைவிக்கக்கூடிய தென்றும் தெரிவித்து மக்களின் எதிர்ப்பு எழுந்ததென்றும்,

(iii) இதற்கமைய மேற்படி வீடமைப்பு கருத்திட்டம் இரத்துச் செய்யப்பட்ட தென்றும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வீடமைப்புத் திட்டம் இரத்துச் செய்யப்பட்டதன் பின்னர், இக்காணி தொடர்பாக பின்பற்றப்பட்டுள்ள நடவடிக்கை யாதென்பதையும்,

(ii) காணியின் மொத்த பரப்பளவு எவ்வளவென்பதையும்,

(iii) இக்காணி தொடர்பிலான திட்டங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?